திவ்ய வாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விஷேசம்

முடிவை வெளிப்படுத்துதல்

முன்னுரை

வெளி. 1:1-2

சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம். இவன் தேவனுடைய வசனத்தைக்குறித்தும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைக்குறித்தும், தான் கண்டயாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான்.

a. தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்த இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடு

- தமிழில் "வெளிப்படுத்தின விஷேசம்" என்றும் ஆங்கிலத்தில் **"Revelation"** என்றும் அழைக்கப்படுவது கிரேக்க மொழியில் ***"apokalypsi"*** என்று அழைக்கப்படுகிறது. அதற்கு மறைவாயிருப்பதை வெளிப்படுத்துவது அல்லது திரையை விலக்குவது என்று அர்த்தம்.
- ஆகவே இந்தப் புத்தகம் மறைப்பதற்கோ, மூடுவதற்கோ அல்ல வெளிப்படுத்துவதற்கான புத்தகம்.
- இங்கு எல்லாவற்றையும் வெளிப்படுத்துகிறவர் இயேசு!
- இங்கு வெளிப்படுத்தபடுகிறவரும் இயேசுவே!
- வெளிப்படுத்தின விஷேசம் ஒரு முத்திரையிடப்பட்ட புத்தகமல்ல (22:10) தானியேலின் புத்தகத்திற்கு மாறுபட்டது (தானி 12:9)
- இந்தப் புத்தகத்தை புரிந்துகொள்ளுவதில் இருக்கக்கூடிய சவால், இது தற்கால மனிதனுக்கு பரிச்சயமில்லாத ஒரு வடிவத்தை கையாண்டு எழுதப்பட்டதுதான். இது "மறைபொருள் இலக்கியம்" என்னும் வடிவத்தை கொண்டு எழுதப்பட்டது. இந்த இலக்கிய வடிவம் கிமு 200 தொடங்கி கிபி 200வரை பிரபலமாக இருந்தது.
- அதனாலே முதல் நூற்றாண்டில் வாழ்ந்த யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இந்த இலக்கிய வடிவம் நன்ன அறியப்பட்டதாயிருந்தது.
- துரதிஷ்டவசமாக ஒருபுறத்தில் இது பலரை இந்தப் புத்தகத்தை படிக்காமல் விலகி நிற்கச் செய்கிறது. இன்னொரு புறத்தில் இந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்வற்றை குறித்து தவறாக கற்பனையான விளக்கங்களை பரப்புவதற்கும் இந்த வடிவம் ஏதுவாகிறது.

b. சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளை

- இங்கே சீக்கிரத்திலே என்பதற்கு பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை ***en tachei*** அதின் அர்த்தம் என்னவெனில் விரைவாக அல்லது உடனடியாக நடக்கவிருக்கும்.
- இதன் உண்மையான பொருள் யாதெனில் சீக்கிரத்தில் சம்பவம் நடக்கப்போகிறது என்பதல்ல மாறக அது நடக்கும்போது சீக்கிரமாக நடக்கும் என்பதே.

c. இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்.

- இந்த புத்தம் குறியீடுகளால் விபரிக்கப்படுகிறது.
- இந்த புத்தம் குறியீடுகளால் விபரிக்கப்பட்டதற்கான மூன்று காரணங்கள்.

1. யோவான் பரலோகத்தின் காரியங்களை விபரிப்பதால் அதை விளக்க குறியீடுகளை பயன்படுத்த வேண்டியிருந்தது. 2கொரி 12:3ல பவுல் சொல்லுவதுபோல மனுஷர் பேசப்படாததும் வாக்குக் கெட்டாததுமாகிய வார்த்தைகள்.
2. குறியீட்டு மொழியில் மிகப்பெரிய ஆற்றல் உள்ளது. உதாரணமாக 17:6ல் சொல்லப்படுகிற பரிசுத்தவான்களின் இரத்தத்தினால் வெறிகொண்ட பெண் என்ற குறியீட்டினால் சொல்லப்படுவதின் பயங்கரம்.
3. யோவான் தனது காலத்து சம்பவங்களை விபரிக்கிறார். ஆனால் அதை அடையாள சங்கேத குறியீடுகளை பயன்படுத்தி விபரிக்கிறார். காரணம் இதை சபைக்கு வெளியே இருக்கிறவர்கள் அறியமாட்டாகள். ஒருவேளை ரோமஅதிகாரிகளால் படிக்கப்பட்டால் அவர்களால் அதை புரிந்துகொள்ள முடியாது.

d. தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனிடத்திற்கு அனுப்பி

- வெளிப்படுத்தின விஷேசத்திலுள்ள பல அடையாளங்களும், தரிசனங்களும் ஒரு தூதனின் மேற்பார்வையிலேயே யோவானுக்கு கொடுக்கப்பட்டது (5:2,7:2,10:8 முதல் 11:1வரை,17:7)
- இது யோவானால் எழுதப்பட்டது. இவரே யோவானின் சவிஷேசத்தையும், 1,2,3 யோவானின் நிருபங்களையும் எழுதினவர். வெளிப்படுத்தின விஷேசம் இவரால் எழுதப்பட்டது என்பது நான்கு இடங்களில் குறிப்பிடப்படுகிறது (1:1,1:4,1:9,22:8)
    - அதிகாரங்கள் 22 வசனங்கள் 404

இந்தப் புத்தகத்திலுள்ள தனிச்சிறப்பு வாய்ந்த அம்சங்கள்

- புதிய ஏற்பாட்டில் உள்ள ஒரேயொரு தீர்க்கதரிசனப் புத்தகம் இதுவே. (பழைய எற்பாட்டிலோ 17 தீர்க்கதரிசனப் புத்தகங்கள் இருக்கிறது என்பதை கவனத்தில் கொள்க)
- இதை ஆக்கியோனாகிய யோவான் மற்ற எந்த வேதாகம நூலாசிரியர்களை விடவும் நித்தியத்தின் தொலைவான கடந்த காலத்தை காண்பித்திருக்கிறார் (யோவா 1:1-3). அவர் வெளிப்படுத்தின விஷேசத்தில் நித்தியத்தின் தொலைவான எதிர் காலத்தை காண்பிக்கிறார்.
- இந்த புத்தகத்தை வாசிப்பவர்களுக்கான விஷேச ஆசீர்வாதம் கூறப்பட்டிருக்கிறது (1:3). அதேபோல இதில் சொல்லப்பட்டவற்றை மாற்றம் செய்ய துணிபவர்களுக்கான தண்டனையும் சொல்லப்படுகிறது (22:18,19)
- பழைய ஏற்பாட்டில் ஆரம்பித்த கடைசிக்காலங்கள் குறித்த தீர்க்கதரிசனங்களின் உச்சக்கட்டம் வெளிப்படுத்தின விஷேசம்.
- தானியேல் 9:27ல் குறிப்பிடப்பட்ட அந்திக்கிறிஸ்துவை குறித்த விளக்கங்கள் வெளிப்படுத்தின விஷேசத்தின் 13ம் அதிகாரத்தில் முழுமையாகவும், விரிவாகவும் விளக்கப்படுகிறது.
- ஒரு தனித்துவமான அம்சமாக ஏழு என்னும் எண்ணிக்கை அடிக்கடியாக பயன்படுத்தப்படுகிறதை காணலாம் (52 தடவைகள்)
- ஒரு குறியீடாக ஏழு என்னும் எண்ணிக்கை பரிபூரணத்தின் அடையாளமாயிருக்கிறது.

• 7 பாக்கியங்கள் (1:3,14:13,16:15,19:9,20:6,22:7,22:14) • 7 சபைகள் (1:4,11) • 7 ஆவிகள் (1:4) • 7 பொன் குத்துவிளக்குகள் (1:12) • 7 நட்சத்திரங்கள் (1:16) • 7 முத்திரைகள் (5:1) • 7 கொம்புகளும் 7 கண்களும் (5:6) • 7 எக்காளங்கள் (8:2) • 7 இடிமுழக்கங்கள் (10:3) • 7 அடையாளங்கள் (12:1,3,13:13–14,15:1,16:14,19:20) • 7 முடிகள் (12:3) • 7 வாதைகள் (15:6) • 7 பொற் கலசங்கள் (15:7) • 7 மலைகள் (17:9) • 7 ராஜாக்கள் (17:10)

பத்மு தீவு

- பத்மு, இது ஒரு கிரேக்க தீவு. எபேசுவிற்கு பக்கத்திலுள்ள துருக்கி கடலோரத்தில் இருந்து நான்கு பணிநேர படகுபயணத் தூரத்தில் அமைந்துள்ளது.
- பத்மு தீவானது கம்பிகள் இல்லாத சிறைச்சாலை தீவாக செயற்பட்டது.
- பளிங்கு கற்கள் நிரம்பிய பகுதி. பெரும்பலான கைதிகள் பளிங்குக்கற்கள் வெட்டி எடுக்கும் குவாரிகளில் கொத்தடிமைகளாக வேலைசெய்தார்கள்.
- பத்மு எபேசுவிலிருந்து 101 கிமீ தூரத்தில் 10 மைல் நீளமும், 6 மைல் அகலமும் உள்ள தீவு.

பத்முவில் யோவான்

- வெளிப்படுத்தின விஷேசம் எழுதப்பட்ட காலத்தில் சபை ரோமர்களால் கடுமையான உபத்திரவத்தை அனுபவித்துக் கொண்டிருந்தது.
- பல ஆண்டுகளாக ரோம அரசாங்கம் கிறிஸ்தவம் யூதமார்க்கத்தின் ஒரு பகுதி என்று கருதிக்கொண்டிருந்ததால் அதை குறித்து அக்கறை காட்டவில்லை. கிறிஸ்தவம் யூதமார்க்கத்தின் ஒரு பகுதியல்ல என்பது அவர்களுக்க உறுதியாக தெரிந்தபோது, இது சட்டத்திற்கு புறம்பான ஒரு மதவழிபாடு என்ற தீர்மானித்தார்கள். வெளிப்படுத்தின விஷேசம் ரோம பேரரசனான டொமித்தியன் இருந்த கிபி 81-96 காலப்பகுதியில் எழுதப்பட்டிருக்கலாம்
- ரோம பேரரசனான டொமித்தியனை குறித்து "தனது பேரரசை கிறிஸ்தவர்களின் இரத்தத்தால் குளிப்பாட்டியவன்" என்ற சொல்லப்படுவதுண்டு.
- ரோம பேரரசர்களாக இருந்தவர்கள் இறந்த பின்பு அவர்களை வழிபடும் வழக்கம் காலகாலமாக இருந்துவந்தது. உயிருடன் இருக்கும்போதே தன்னை வழிபடவேண்டும் என்று நிர்ப்பந்தித்தவன் டொமித்தியன்.
- பல வேத அறிஞர்களின் கருத்துப்படி யோவான் ரோம அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு தண்டனைக்காக பத்மு தீவில் சிறைவைக்கப்பட்டார். இது சரியான கருத்தாக இருக்கலாம் காரணம் உங்கள் சகோதரனும், இயேசுகிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் உடன்பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான் என்று அவர் குறிப்பிடுகிறார் (வெளி 1:9)
- ரோமர்கள் யோவானை கொதிக்கும் எண்ணை கொப்பரைக்குள் தூக்கிப்போட்டும் அவர் சகாதிருந்ததினால் அவரை கற்பாறைகள் மிகுந்த பத்முவிற்கு நாடுகடத்தினார்கள் என்று ஒரு பாரம்பரிய நம்பிக்கை இருக்கிறது.
- யோவான் பத்மு தீவிலிருந்த சிறைக்கைதிகளுக்கு ஊழியஞ்செய்ய மிஷனரியாக அங்கு சென்றிருக்கலாம் என்கிற சாத்தியகூறும் உண்டு
- கிபி 96ல் டொமித்தியனின் மரணத்திற்கு பின்பு யோவான் எபேசுவிற்கு செல்ல அனுமதிக்கப்பட்டார்.

தப்போதைய துருக்கியில் உள்ள 7 சபைகளுக்கு எழுதப்பட்டது

7 சபைகளின் முக்கியத்துவம்

- மனுஷ குமாரன் தனது வலது கரத்தில் ஏழு நட்சத்திரங்களை ஏந்தினவராய் ஏழு குத்துவிளக்குகள் நடுவில் உலாவுவதை யோவான் தரிசனத்தில் கண்டார்.
- வெளிப்படுத்தின விஷேசத்தின் 2-3 அதிகாரங்களில் ஏழு சபைகளின், ஏழு தூதர்களுக்கான பிரத்தியேகமான செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- வெளிப்படுத்தின விஷேசம் 1:20 அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம்; நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்.

மூன்று அர்த்தங்கள்:

1. நடைமுறை அர்த்தம்: இது எழுதப்படும்போது ஆசியாவில் இருந்த இந்த ஏழு சபைகளுக்குள்ளும் இந்த நிலைமைகள் எழுத்தின்படியே காணப்பட்டது.
2. நிலையான அர்த்தம்: அந்த சபைகளில் காணப்பட்ட நிலைமைகளும், சொல்ப்பட்ட பிரச்சினைகளும் ஏதோ ஒரு அளவில் கர்த்தரின் வருகை வரையில் இருக்கும்.
3. தீர்க்கதரிசன அர்த்தம்: இந்த நிலைமைகள் சபை வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குரியனவாக இருந்து அந்தக் காலங்களில் தீர்க்கதரிசனங்களாக பேசும்.

7 சபைகளுக்கான நடைமுறை அர்த்தம்

எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா ஆகியவை முதலாம் நூற்றாண்டில் எழுத்தின்படியே சின்ன ஆசியாவில் (தற்போதைய துருக்கி) இருந்த சபைகள் ரோம பிரதான சாலையின் கேந்திரமான பகுதிகளில் அமைந்திருந்தன.

1. எபேசு: ஏஜியான் கடலின் பிரதான துறைமுகமாகவும், சின்ன ஆசியாவின் நுழைவாயிலாகவும், புராதன காலத்து ஏழு உலக அதிசயங்களில் ஒன்றான ஆர்டிமிஸ் தேவதையின் கோயிலையும் கொண்டிருந்த பட்டணம். இங்கு பவுலால் ஆரம்பிக்கபட்ட எபேசு சபை சின்ன ஆசியாவிலேயே முக்கிய சபையாக இருந்தது.
2. சிமிர்னா: புகழ் பெற்ற கிரேக்க கவிஞரான ஹோமரின் சொந்த ஊர். அத்தேனா தேவதைக் கோயில் இருந்த இடம். கிபி இரண்டாம் நூற்றாண்டில் சபைகளின் கண்காணிப்பாளராக இருந்த போலிகார்ப் ரோம ஆட்சியில் இரத்த சாட்சியாக மரித்தார்.
3. பெர்கமு: ரோம மாகாணத்தின் தலைநகர் பட்டணம். கலாச்சார மையமாகவும் திகழ்ந்தது. அலெக்சாந்திரியாவில் இருந்த புகழ்பெற்ற நூல்நியைத்திற்கு ஒப்பான ஒரு நூல்நிலையம் இங்கே இருந்தது.
4. தியத்தீரா: மகா அலெக்ஸாண்டரால் நிறுவப்பட்ட பட்டணம். வியாபார முக்கியத்துவம் வாய்ந்த இடம். இரத்தாம்பர சாயத்தொழிலுக்கு பேர்போனது. பவுலினால் கிறிஸ்தவளான லீதியாள் இந்தப் பகுதியை சேர்ந்தவள் (அப்16:14)
5. சர்தை: புராதன ராஜ்யமாக இருந்த லிடிய ராஜ்யத்தின் தலைநகர். உயர்ந்த பீடபூமியில் அமைந்திருந்ததால் பல வெளிநாட்டு படையெடுப்புக்களுக்கு தாக்குப்பிடித்து நின்றது.
6. பிலதெல்பியா: ‘‘கிழக்கின் நுழைவாயில்’’ என்று அழைக்கப்பட்ட இந்த பட்டணம் இதன் திராட்சைக்கும், துணிகளுக்கும், தோலால் செய்யப்பட்ட பொருட்களுக்கும் பேர்போனது.
7. லவோதிக்கேயா: பிரிகியாவின் பழங்கால தலைநகர் பட்டணம். அதன் செல்வம் வியாபாரத்தினாலும், வங்கித் தொழிலாலும் வந்தது. அங்கிருந்த மருத்துவக்கல்லூரியும், விலையுயர்ந்த துணிகளும் புகழ்வாய்ந்தவை.

இன்று இந்த சபைகளில் ஒன்றுகூட இல்லை.

7 சபைகளுக்கான நிலையான அர்த்தம்

இந்த ஏழு சபைகளும், ஏழு வித்தியாசமான தனிநபர்களையும், அவர்களிடம் காணப்படு கிறதும், தொடர்ந்து காணப்படப்போகிறதும், ஒவ்வொரு சபைகளுக்குள்ளும் ஏதோ ஒரு அளவில் கர்த்தரின் வருகை வரையில் இருக்கப்போகிறதுமான வித்தியாசமான ஆவிக்குரிய நிலையை வெளிப்படுத்துகிறது.

- எபேசு: இந்த சபையார் கிறிஸ்துவின் மீதிருந்த ஆதி அன்பை விட்டுவிட்டார்கள் 2:4
- சிமிர்னா: இந்த சபை கடுமையான உபத்திரவத்தை சந்திக்கபோகிறது 2:10
- பெர்கமு: இந்த சபை பாவத்திற்காக மனம்வருந்த வேண்டியவர்கள் 2:16
- தியத்தீரா: இந்த சபையின் தீர்கதரிசியானவள் ஜனங்களை வழிதவறப்பண்ணுவாள் 2:20
- சர்தை: இந்த சபை நித்திரையிலிருந்து விழிக்கவேண்டும் 3:2
- பிலதெல்பியா: இந்த சபையார் பொறுமையுடன் தொடர்ந்து முன்னேறுகிறார்கள் 3:10
- லவோதிக்கேயா: இந்த சபை அனலோ குளிரோ இன்றி வெதுவெதுப்பாயிருக்கிறது 3:16

7 சபைகளுக்கான தீர்க்கதரிசன அர்த்தம்

இந்த ஏழு சபைகளும் சபை வரலாற்றின் ஏழு வித்தியாசமான காலகட்டங்களை குறித்து தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்துகிறது.

சபை வரலாற்றின் 7 காலகட்டங்கள்

1. எபேசுவில் உள்ள சபை 2:1-7: அதி அன்பை விட்டுவிட்டது 2:4 - அப்போஸ்தல சபை **=>** கிபி 30-300
2. சிமிர்னாவில் உள்ள சபை 2:8-11: உபத்திரவத்தை சந்திக்கும் 2:10 - இரத்தசாட்சிகளின் சபை **=>** கிபி 100-313
3. பெர்கமுவில் உள்ள சபை 2:12-17 மனந்திரும்ப வேண்டியது அவசியம் 2:16 - சமரசம் செய்துகொள்ளும் சபை **=>** கிபி 314-590
4. தியத்தீராவில் உள்ள சபை 2:18-29 கள்ள தீர்க்கதரிசியானவள் இருந்தாள் 2:20 - ரோமன் கத்தோலிக்க சபை **=>** கிபி 590-1517
5. சர்தையில் உள்ள சபை 3:1-6 உறங்கப்போய்விட்டது 3:2 - சீர்திருத்தச் சபை **=>** கிபி 1517-1700
6. பிலதெல்பியாவில் உள்ள சபை 3:7-13 பொறுமையோடு சகித்திருக்கிறது 3:16 - எழுப்புதலின் சபை **=>** கிபி 1700-1900
7. லவோதிக்கேயாவில் உள்ள சபை 3:14-22 வெதுவெதுப்பான விசுவாசம் 3:16 - உலகத்துச் சபை **=>** கிபி 1900- இரகசிய வருகை

7 சபைகளுக்கான தீர்க்கதரிசன அர்த்தம்

இந்த ஏழு சபைகளும் சபை வரலாற்றின் ஏழு வித்தியாசமான காலகட்டங்களை குறித்து தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்துகிறது.

சபை வரலாற்றின் 7 காலகட்டங்கள்

1. எபேசுவில் உள்ள சபை 2:1-7: அதி அன்பை விட்டுவிட்டது 2:4 - அப்போஸ்தல சபை **=>** கிபி 30-300
2. சிமிர்னாவில் உள்ள சபை 2:8-11: உபத்திரவத்தை சந்திக்கும் 2:10 - இரத்தசாட்சிகளின் சபை **=>** கிபி 100-313
3. பெர்கமுவில் உள்ள சபை 2:12-17 மனந்திரும்ப வேண்டியது அவசியம் 2:16 - சமரசம் செய்துகொள்ளும் சபை **=>** கிபி 314-590
4. தியத்தீராவில் உள்ள சபை 2:18-29 கள்ள தீர்க்கதரிசியானவள் இருந்தாள் 2:20 - ரோமன் கத்தோலிக்க சபை **=>** கிபி 590-1517
5. சர்தையில் உள்ள சபை 3:1-6 உறங்கப்போய்விட்டது 3:2 - சீர்திருத்தச் சபை **=>** கிபி 1517-1700
6. பிலதெல்பியாவில் உள்ள சபை 3:7-13 பொறுமையோடு சகித்திருக்கிறது 3:16 - எழுப்புதலின் சபை **=>** கிபி 1700-1900
7. லவோதிக்கேயாவில் உள்ள சபை 3:14-22 வெதுவெதுப்பான விசுவாசம் 3:16 - உலகத்துச் சபை **=>** கிபி 1900- இரகசிய வருகை

வியாக்கியானம் செய்தல்

இந்தப் புத்தகத்தை வியாக்கியானம் செய்ய பலவிதமான முறைகள் கையாளப்பட்டாலும் அவற்றை நான்கு பிரதான பிரிவிற்குள் அடக்கிவிடலாம்

1. ஏற்கனவே நடந்துவிட்ட நிகழ்வுகள் என்னும் கொள்கை **Preterit theory**

எல்லா வெளிப்படுத்தல்களும் கடந்த காலத்தில் நிறைவேறிவிட்டன. வெளிப்படுத்தின விஷேசம் வருங்காலத்தின் காரியங்களை சொல்லவில்லை. யோவான் தனது காலமான கிபி முதல் நூற்றாண்டிலோ அல்லது அதற்கு சிறிது காலம் கழித்தோ நடந்த நிகழ்ச்சிளை பதிவிட்டிருக்கிறார். இந்த சம்பவங்கள் நீரோ அல்லது டொமித்தியன் காலத்தில் நிகழ்ந்தவை.

2. வரலாறு என்னும் கொள்கை **Historical theory**

வெளிப்படுத்தின விஷேசத்தில் சொல்லப்பட்டவை நிறைவேறிக்கொண்டிருக்கிறது. வெளிப்படுத்தின விஷேசம் சபையின் தீர்க்கதாசன வரலாறு. அது வரவிருக்கும் கடைசிக் காலத்தின் சம்பவங்களை சொல்லவில்லை. கத்தோலிக்க மார்க்கத்தின் வளர்ச்சி, இஸ்லாம், பிரிவினைசபையாரின் சீர்திருத்தம், உலகப்போர்கள் போன்றவை சொல்லப்பட்டு இறுதியில் இயேசுவின் மறுவருகையோடு முடிவடைவது இந்த கொள்கையாளர்கள் முன்வைக்கும் சான்றுகள்.

3. தத்துவம் என்னும் கொள்கை **The "idealist" view**

இந்த புத்தகம் எந்த வரலாற்று நிகழ்ச்சியையும் எழுதவில்லை. இது ‘‘நல்லது இறுதியில் தீயதை வெல்லும்’’ என்னும் தத்துவத்தை சொல்லுகிறது. அதனால் இது எல்லாக்காலத்திற்கும் ஏற்ற புத்தகம்.

4. இனி வரப்போகும் நிகழ்வுகள் என்னும் கொள்கை **The "futurist" view**

முதலில் உள்ள சில அதிகாரங்களை தவிர்த்து, இந்தப் புத்தகத்தின் மீதி அதிகாரங்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குக்கு பின்னாக உடனடியாக நடக்கப்போகும் சம்பவங்களை விபரிக்கிறது. ஆகவே இதில் சொல்லப்பட்டுள்ளவற்றில் பெரும்பாலனவைகள் இன்னும் நிறைவேறவேண்டியிருக்கிறன (அல்லது தற்போது நிறைவேறிக்கொண்டிருக்கிறன). இயேசுவின் மறுவருகையில் உயிரோடு இருப்பவர்களுத்தான் இது அதிக பிரயோஜனமுள்ள தாக இருக்கும்.

இதில் எது சரியானது?

- ஒவ்வொன்றிலும் ஏதோவொரு விதத்தில் உண்மை இருக்கிறது.
- வெளிப்படுத்தின விஷேசம் யோவானின் நாட்களில் பேசியது. அது சபை வரலாற்றில் பேசியது. நமது தனிப்பட்ட வாழ்க்கைக்கும் பேசுகிறது.
- மற்ற மூன்று கொள்கைகளுக்குமான உரிய இடம் உண்டென்றாலும் இனி வரப்போகும் நிகழ்வுகள் என்னும் கொள்கைக்கான இடத்தை நாம் மறுக்க முடியாது.
- வெளிப்படுத்தின விஷேசம் 1:19-20ல் கடந்தகால, நிகழ்கால, எதிர்கால நிகழ்வுகளை எழுதும்படி யோவான் பணிக்கப்படுகிறார் (யோவானின் கண்ணோட்டத்திலிருந்து எழுதும்படி)

1. கண்டவைகளையும்: இயேசுவின் பரலோக மகிமையை தரிசனத்தில் கண்டதுபோல
2. இருக்கிறவைகளையும்: அவர் இருந்த காலத்தின் காரியங்கள், ஆசியாவில் இருக்கிய ஏழு சபைகளின் காரியங்கள்
3. இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளையும்: ஏழு சபைகளின் காரியங்கள் சம்பவித்ததற்கு பின்பாக உள்ள கடைசிக்கால சம்பவங்கள்

வெளிப்படுத்தின விஷேசத்தின் கட்டமைப்பு மூன்று பகுதிகளாக அமைக்கப்பட்டிருக்கிறது.

1. கண்டவைகள்: வெளிப்படுத்தின விஷேசம் அதி 1
2. இருக்கிறவைகள்: வெளிப்படுத்தின விஷேசம் அதி 2-3
3. இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகள்: வெளிப்படுத்தின விஷேசம் அதி 4-22

REVELATION TIMELINE



ஏழு வருட உபத்திரவம்

உன் ஜனத்தின்மேலும் உன் பரிசுத்த நகரத்தின் (எருசலேம்) மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது.

- 1 நாள்=1 வருடம் : 1வாரம் = 7 வருடங்கள்: 70 வாரங்கள் = 490 வருடங்கள்
- 483 வருடங்கள் (39 வாரங்கள்) கிறிஸ்துவரையில் நிறைவேறின
- இறுதி 7 வருடங்கள் (1 வாரம்) 7 வருட உபத்திரவகாலம்

7 வருட உபத்திரவகாலத்தின் நோக்கம் (தானியேல் 9:24)

- மீறுதலைத் தவிர்க்கிறதற்கும்
- பாவங்களைத் தொலைக்கிறதற்கும்
- அக்கிரமத்தை நிவிர்த்திபண்ணுகிறதற்கும் (ஒப்புரவாகுதல்)
- நித்திய நீதியை வருவிக்கிறதற்கும் (தேவனோடு சரியான நிலையை எடுத்தல்)
- தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும்
- மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம்பண்ணுகிறதற்கும்,



அந்திக்கிறிஸ்து



- புதிய ஏற்பாடு முழுவதிலும் அபகீர்த்தியான வார்த்தையான அந்திக்கிறிஸ்து (antikristos) என்பது யோவான் நிருபங்களில் மாத்திரமே காணப்படுகிறது (1யோவா 2:18,22,4:3,2யோவா1:7)
- கள்ளப் போதகர்களை அந்திக்கிறிஸ்து என்று குறிப்பிடுகிறார் (2:18) அவர்களுக்குள் அந்திக்கிறிஸ்துவின் ஆவி இருந்தது (4:3)
- மாம்சத்தில் வெளிப்பட்ட இயேசுவே கிறிஸ்து என்னும் சத்தியத்தை மறுதலிப்பதே இந்தக் கள்ளப்போதகர்கள் அந்திக்கிறிஸ்து என்பதற்கு அடையாளமாயிருக்கிறது (1யோவா2:22,4:3,2யோவா 1:7)
- 1 யோவா 4:3ல் சொல்லப்படுகிற அந்திக்கிறிஸ்து பெரும்பாலும் பின்வருனவற்றோடு தொடர்புடையதாக இருக்கலாம்

- பாழாக்கும் அருவருப்பு (மாற்கு 13:14)
- கேட்டின் மகன் (2தெச 2:3-4)
- மிருகம் (வெளி 13:1-9,11-18,11:7)

- இந்த தீயசக்தியைக் குறித்த எதிர்பார்ப்பு தானியேலின் தரிசனத்தின் அடிப்படையில் உருவானது (தானி 7:8,19-25, 9:27, 11:31,36, 12:11)

அந்திக்கிறிஸ்துவின் பிரதானமான 10 காரியங்கள்

1) தன்னை தேவன் என்று அறிவித்து தனக்கு வழிபாடு செய்ய கோருவான்- 2தெச 2:3-4

2) தேவனை தூஷிப்பான் - வெளி 13:6

3) அதிசய வல்லமையை காண்பிப்பான் - வெளி 13:13

4) மரணத்துக்கேதுவான காயப்பட்டு அதிலிருந்து மீண்டுவருவான் - வெளி 13:14

5) மூன்றரை ஆண்டுகள் முழுஅதிகாரத்தோடு ஆட்சிசெய்வான் - வெளி 13:5,7

6) உலகத்தின் பொருளாதாரம் அவன் கட்டுப்பாட்டிலிருக்கும் - வெளி 13:16-17

7) தேவனுடைய ஆலயத்தை தீட்டுப்படுத்துவான் - தானி 11:13,12:1

8) இஸ்ரவேலை அழிக்க முயற்சி செய்வான் - தானி 11:40-41

9) கிறிஸ்துவுக்கு எதிராக உலகத்தின் இராணுவத்தை போரிடச்செய்வான் -வெளி19:19

10) கடைசியில் அக்கினிக்கடலில் தள்ளப்படுவான் - வெளி 20:19-20

இரண்டு சாட்சிகள்



- வெளி 11:3-12ல் உபத்திரவ காலத்தில் தேவனுடைய வேலையை செய்து முடித்த இரு நபர்களை குறித்துப் சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய இரண்டு சாட்சிகளும் ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனஞ்சொல்லும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பேன் வச 3.
- இந்த இரு சாட்சிகளும்:

1) அவர்களது செய்தியோடு அதிசய வல்லமைகளையும் வெளிப்படுத்துவார்கள் 11:6
2) அவர்களது வேலையை ஒருவராலும் தடுக்க முடியாது 11:5
3) அவர்களது ஊழியத்தின் முடிவிலே, அவர்கள் அறிவிக்கவேண்டியவற்றை எல்லாம் அறிவித்த பிற்பாடு, மிருகத்தால் கொல்லப்படுவார்கள், துன்மார்க்க உலகம் அதற்காக மகிழும், கொலையுண்ட தீர்க்கதரிசிகளின் உடல்கள் வீதியில் கிடக்கும் 11:7-10
4) மூன்றரை நாட்களுக்குப் பின்பு தேவனுடைய அந்த இரு சாட்சிகளும் உயிர்ப்பிக்கப்பட்டு அவர்களது எதிரிகளின் கண்களுக்கு முன்பாக பரலோகத்திற்கு ஏறிப்போவார்கள் 11:11-12

யார் இந்த இரண்டு சாட்சிகள்?

- வெளிப்படுத்தின விஷேசம் சொல்லுகிற இந்த இரண்டு சாட்சிகள் குறித்து மூன்று அடிப்படையான கொள்ளைகள் உண்டு

1. மோசேயும், எலியாவும
2. ஏனோக்கும், எலியாவும்
3. கடைசிக்கலத்தில் தேவன் தமது சாட்சியாய் நிற்க எழுப்பும் பெயர் குறிப்பிடப்படாத விசுவாசிகள்

- ஏனோக்கும், எலியாவும் இந்த சாட்சிகளாய் இருப்பார்கள் என்பதற்கு அவர்கள் இருவரும் மரணத்தை காண்பதற்கு முன்னர் தேவனால் எடுத்துக்கொள்ப்பட்டது காரணமாயிருக்கலாம் (ஆதி 5:23, 2இரா 2:11)
- இது சரியென்று வாதிடுவோர் எபி 9:27ல் ஒருதரம் மரணமடைவது எல்லோருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆதாரமாக காண்பிக்கிறார்கள்.
- மரணத்தை காணாத ஏனோக்கும், எலியாவும் இரண்டு சாட்சிகளின் பணிக்கு தகுதியானவர்கள். அவர்களது பணியின் நிறைவிலே கொல்லப்படுவார்கள்.
- மேலும் இவர்கள் இருவரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு குறித்து பேசியவர்கள் (1இரா 17:1, யூதா 1:14–15).

7 முத்திரைகளும் அதன் தண்டனைகளும்

- முதலாம் முத்திரை 6:1,2 – வெள்ளைக்குதிரை – அழிக்க வரும் அந்திக்கிறிஸ்து
- இரண்டாம் முத்திரை 6:3,4 – சிவப்புக்குதிரை – வெளிப்படையான யுத்தம் ஆரம்பம்
- மூன்றாம் முத்திரை 6:5,6 – கறுப்புக்குதிரை – உலகம் முழுவதும் பஞ்சம்
- நாலாம் முத்திரை 6:7-8 – மங்கின நிறமுள்ள குதிரை – பூமியில் ¼ பங்கு மரணம்
- ஐந்தாம் முத்திரை 6:9-11 - இரத்தசாட்சிகள் - விசுவாசிகள் பழிவாங்க விண்ணப்பித்தல்
- ஆறாம் முத்திரை 6:12-17- புவியியல் குழப்பங்கள் - பூமியதிர்ச்சி, சூரியன் இருளடைதல்
- ஏழாம் முத்திரை 8:1 – எக்காளத் தண்டனையின் துவக்கம்

உபத்திரவத்தின் நடுவில்



- அந்திக்கிறிஸ்து கொல்லப்படுதல் வெளி 13:3
- சாத்தான் வானத்திலிருந்து பூமிக்கு விழத்தள்ளப்படுதல் வெளி 12:7-9
- அந்திக்கிறிஸ்து உயிர்தெழுதல் 13:3,4
- அந்திக்கிறிஸ்து வணங்கப்படுதல் 13:3,4,8
- மிருகத்தின் அடையாளமான 666 13:16-18
- இஸ்ரவேலுடனான 7 ஆண்டுகள் சமாதான உடன்படிக்கை முறிவு (ஏசா 28:18, தானி 11:41)
- யூதர்கள் உபத்திரவப்படுத்தபடுதல் 12:1-6
- பாழாக்கும் அருவருப்பு (தானியேல் 9:27, மத்தேயு 24:15-16, 2 தெச 2:4)

7 எக்காளங்களும் அதன் தண்டனைகளும்



- முதலாம் எக்காளம் (8:7) – 1/3 மரங்கள் வெந்துபோனது
- இரண்டாம் எக்காளம் (8:8-9) – 1/3 கடல் இரத்தமானது
- மூன்றாம் எக்காளம் (8:10-11) – 1/3 நல்ல தண்ணீர் மாசுபட்டது
- நாலாம் எக்காளம் (8:12-13) - 1/3 சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இருளாகின
- ஐந்தாம் எக்காளம் (9:1-11) – வெட்டுக்கிளிகள் உபாதித்தது ஆனால் கொல்லவில்லை
- ஆறாம் எக்காளம் (9:13-21)- 20 கோடி இராணுவங்கள் மனிதகுலத்தை 1/3 அழித்தன
- ஏழாம் எக்காளம் (11:15-19)- கலச தண்டனையின் ஆரம்பம்

1,44,000 பரிசுத்தவான்கள்

வெளி 14:1 பின்பு நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன்.

- 1,44,000 என்பது வரலாறு முழுவதிலுமிருந்து நித்திய ஆக்கினையை அடையாதபடி இரட்சிக்கப்படுகிற ஆத்துமாக்களின் எண்ணிக்கையை குறிப்பதாக கிறிஸ்தவர்கள் கருதவில்லை.
- பொதுவாக கிறிஸ்தவர்கள் எழுத்தின்படி 1,44,000 பேர்கள் என்றோ, அல்லது திரளான ஜனங்களை குறிக்கும் ஒரு குறியீடாகவோ அதை பார்க்கிறார்கள்.
- 1,44,000க்குள் “கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்த யூதர்களும் அடங்குவார்கள். 12000 பேர்கள் ஒவ்வொரு (12) கோத்திரங்களிலிருந்தும். இது நிச்சயமில்லாத ஒரு எண்ணிக்கையில் காணப்படும் நிச்சயமுள்ள எண்ணிக்கை. ஆகவே ஒவ்வொரு கோத்திரத்திலிருந்து 12000 பேர்கள் மாத்திரமே இரட்சிக்கப்படுவார்கள் என்று கருதலாகாது.
- 1,44,000 என்பது எண்கள் பற்றிய ஆய்வுக்கு உட்படக்கூடியது. “பன்னிரண்டு” என்பது வேதாகமம் முழுவதிலும் பூரணத்தின் அல்லது நிறைவின் ஒரு குறியீடு. எடுத்துக்காட்டாக இஸ்ரவேலின் கோத்திரங்கள்12, இயேசுவின் அப்போஸ்தலர்கள்12
- 1000 என்னும் எண்ணிக்கையை குறியீட்டுச் சொல்லாக பழைய எற்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. உபா 1:11 ஆயிரமடங்கு அதிகமாகும்படி கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. உபா 7:9 ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற தேவன். சங் 50:10 பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்கள். மேலும் ஏசாயா 60:22, சங் 84:10, யாத் 20:6, 2 சாமு 18:12 ஆகியவை.

1,44,000 குறித்த யெகோவாவின் சாட்சிகளின் நம்பிக்கை

- யெகோவாவின் சாட்சிகள் பரலோக சபைக்குள் எடுத்துக்கொள்ளப்படுகிறவர்கள் 1,44,000 பேர்கள் மாத்திமே என்று நம்புகிறார்கள். யெகோவாவின் சாட்சிகளின் நம்பிக்கையை பின்பற்றாதவர்கள் அதாவது மீதியாகவுள்ளவர்கள் நரகத்திற்காக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.
- இரட்சிக்கப்பட்டவர்களில் மீதியானவர்கள் தேவனின் மகிமையான பூமியில் வைக்கப்பட்டு 1,44,000 பேர்களால் ஆளப்படுவார்கள். அவர்கள் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படலாம் அல்லது மகிமையான பூமியில் விடப்படலாம் என்பது அவர்களின் நம்பிக்கை.

7 கலசங்களும் அதன் தண்டனைகளும்

- முதலாவது கலசம் (16:1-2) – அந்திக்கிறிஸ்துவை பின்பற்றுபவர்கள் கொடியபருக்களால் வாதிக்கபடுதல்
- இரண்டாவது கலசம் (16:3) – எல்லாக் கடல்களும் இரத்தமாகி அதிலுள்ள யாவையும் மாளுதல்
- மூன்றாவது கலசம் (16:4-7) – எல்லா நல்ல தண்ணீர்களும் இரத்தமாதல்
- நாலாவது கலசம் (16:8-9) – மிகுந்த உஷ்ணத்தினாலே தகிக்கப்பட்டார்கள் (ஜனங்கள் தேவனை தூ ஷித்தார்கள்)
- ஐந்தாவது கலசம் (16:10-11) – அந்திக்கிறிஸ்துவின் ஆளுகையில் உள்ள இடங்கள் இருளாதல்
- ஆறாவது கலசம் (16:12-15) – ஐபிராத்து நதி வற்றிப்போதல் (அர்மகெதோன் யுத்தத்திற்கான களம் தயார்)
- ஏழாவது கலசம் (16:17-21) - இதுவரை காணாத பூமியதிர்ச்சி, பாபிலோன் அழிக்கப்படல், 100 பவுண்டு எடையுள்ள கல்மழை பூமியில் பெய்தது

அர்மகெதோன் யுத்தம்

- தேவனுக்கும், தீயசக்திகளுக்கும் இடையான இறுதி யுத்தம் (16:16)
- இஸ்ரவேலுக்கு எதிராக யுத்தம் செய்ய அந்திக்கிறிஸ்துவின் ஆதரவு ராஜாக்கள் அணிதிரள்தல்
- அர்மகெதோனில் தேவனுடைய கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரம்(16:19) வைக்கப்படும். அந்திக்கிறிஸ்துவும் அவனைப் பின்பற்றுபவர்களும் கவிழ்கப்பட்டு அழிக்கப்படுவார்கள்.